# ஆய்வுக் களஞ்சியம்




பதிப்பாசிரியர்

செல்வி ம.காயத்

# ஆய்வுக் களஞ்சியம்

(ஆய்வுக்கட்டுரைத்தொகுப்பு)

தமிழ்த்துறை

லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி(தன்னாட்சி)

ிய மீள்தர மதிப்பீடு & மதிப்பேற்றுக் குழுவின் 'A' தகுதி பெற்றது

ஐ.எஸ்.ஓ. 2008-2015 தரச்சான்றிதழ் பெற்றது

90, பாலக்காட்டுச் சாலை, பொள்ளாச்சி- 642001.

பதிப்பாசிரியர்

*செல்வி ம.காயத்ரி*

# ஆய்வுக் களஞ்சியம்

பதிப்பாசிரியர் : செல்வி ம.காயத்ரி

பதிப்புரிமை : பதிப்பாசிரியர்

முதற்பதிப்பு : ஆகஸ்ட், 2018

வெளியீடு : தமிழ்த்துறை,
நல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி,
பொள்ளாச்சி.

அச்சாக்கம் : அறம் பதிப்பகம்,
ஈரோடு, அலைபேசி: 77088-21464, 85084-84583.
arampathippakam@gmail.com

**ISBN: 978-93-86770-84-4**

Editor's : Selvi M.Gayathri

Copyright's : Editor

First Edition : August- 2018

Published : Department of Tamil,
N.G.M. College, Pollachi.

Printing at : **Aram Book House,**
7A,Veerabhatra 2nd Street,
Sathy Road, Erode-3.
77088-21464, 85084-84583.
arampathippakam@gmail.com

Pages : 118+14=132

Price : 100/-

# உள்ளடக்கம்


| வ.எண் | பெயர் | தலைப்பு | ப.எண் |
|---|---|---|---|
| 1. | சி.அமுதா | - யாழ் - புதிய பார்வை | 1 |
| 2. | ச.கவிதா | - சங்ககாலக் குடும்பம் | 7 |
| 3. | எஸ்.கனகவள்ளி | - வரும் முன் காப்போம் | 13 |
| 4. | ஆ.காமாட்சியம்மாள் | - சிறுகதைகள் | 18 |
| 5. | மு.காமராஜ் | - தமிழக நிகழ்த்துக் கலைகளில் சிலம்பாட்டம் | 21 |
| 6. | ம.காயத்ரி | - திணைமரபு | 26 |
| 7. | கோமதி | - சிறுகதைகள் | 34 |
| 8. | மா.ஜெ.சசிக்குமார் | - சிலம்பக்கலைக்கு ஆதாரங்கள் | 37 |
| 9. | வே.சக்திவேலு | - ஆயிஷா இரா.நடராசன் காட்டும் வகுப்பறை | 41 |
| 10. | சு.சதீஸ்குமார் | - தனி நின்ற தத்துவத்தின் தகை மூர்த்தி | 45 |
| 11. | பா.சதீஷ் குமார் | - சைவத் திருமுறையில் செவிடு என்ற ஊனக்குறிப்பு வெளிப்படும் முறை | 53 |
| 12. | சூர்யா . ர | - விகடன் தடம் இதழில் மனுஷ்யபுத்திரன் பார்வையில் பெண்கள் | 59 |
| 13. | சு.நளினி | - அக இலக்கியங்களில் அஃறிணை உயிரினங்கள் | 65 |
| 14. | அ.நித்யா | - சங்க இலக்கியத்தில் தழை ஆடை | 69 |
| 15. | த.நர்மதா தேவி | - புறநானூற்றில் கொடைத்தன்மையும் அறக்கருத்துக்களும் | 73 |
| 16. | பா.பௌத்ரா தேவி | - புதுமைப்பித்தனின் - பொன்னகரம் - ஆய்வு | 79 |
| 17. | ப.பிரதாப் | - அறஇலக்கியங்களில் கல்விக்கோட்பாடு | 82 |

18. கா.புவனேஸ்வரி - சங்க கால உணவு முறைகள் 86
19. அ.மகபூ - சில சங்ககால ஊர்பெயர்களும் அதற்கான காரணங்களும் 91
20. மகேஸ்வரி - சிறுகதை இலக்கியம் 95
21. து.விசாலாட்சி - வா.மு.கோமுவின் சிறுகதைகள் - ஒரு பார்வை 99
22. ஜெ. வினோதினி - குறுந்தொகையில் செவிலி நற்றாய் நிலை 104
23. வேணுகோபால் - வண்ணநிலவன் சிறுகதைகள் உணர்த்தும் சமுதாயப் பதிவுகள் 107
24. நா.ஸ்ரீ பிரியா - நற்றிணையில் பழக்க வழக்கங்கள் 111
25. ஷரிமளாதேவி - காட்டுப் பூக்களின் கானங்கள் 115

# வா.மு.கோமுவின் சிறுகதைகள் - ஒரு பார்வை

து.விசாலாட்சி,
பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை,
ந.க.ம.கல்லூரி,
பொள்ளாச்சி.

சிறுகதைகள் என்பவை சிறிய அளவிலான கதை. படிப்பவரின் மனதில் வரும் கற்பனைகள், சம்பவங்கள், கதாப்பாத்திரங்களின் தன்மை, பண்பாடு என்பன என்றும் மனதில் நிற்பவையாகும். அதனை அறிந்து கதை புனையும் ஆற்றல் உள்ளவர்களால் மட்டுமே என்றும் நிலைத்து இருக்கமுடியும். உண்மை என்பனவற்றையெல்லாம் உண்மை என்று எழுதாமல் அதனுடன் சில கற்பனைகளையும் சேர்த்து எழுதுவது என்பது எழுத்தாளர்களின் மரபு. அப்படியாக தனது சிறுகதைகளில் கற்பனையும், சமுதாயச் சிக்கல்களையும், குடும்பப் பிரச்சனைகளையும் சேர்த்து எழுதியுள்ளார் வா.மு.கோமு.

**அமைதியைத் தேடி**

'நெரிசல் மிகுந்த வீடு' என்னும் கதையில் சிவசாமி தான் காதலித்த கிறிஸ்துவப் பெண்ணை தன் பெற்றோரின் இசைவில்லாமல் திருமணம் செய்து கொண்டு, மாமனார் இருக்கும் வாடகை வீட்டில் அவனும் தங்கிவிடுகிறான். ஒரு சமயத்தில் மாமனார், மருமகன் இருவருக்கும் பிரச்சனை ஆகிவிடவே, சிவசாமி வீட்டை விட்டுப் புறப்படத் தயாராகிறான். பின் மனைவியின் சாமர்த்தியமான பேச்சால் தங்க சம்மதிக்கிறான். அதனால் மாமனாரும், மைத்தினியும் வெளியேறிவிட்டனர். நாட்கள் சென்றன. சிவசாமியின் உறவினர்கள் ஒவ்வொருவராக உறவு கொண்டாடிக் கொண்டு வர ஆரம்பிக்கின்றனர். சிவசாமியின் பெற்றோரும் வந்து மகனுடன் சேர்ந்துவிட்டனர். சொந்தங்கள் அனைவரும் வர வீடே நிரம்பி வழிந்தது. மளிகை சாமான்கள் எல்லாம் கல்யாண வீட்டிற்கு வாங்குவது போல வாங்கினான். தூங்குவதற்குக் கூட இடமில்லாமல் தொடர்வண்டியில் ஓரமாக நின்றுகொண்டு உறங்குபவனைப்போல தன்வீட்டிலே உறங்கினான். கடைசியில் தன் உடன் பிறந்த தம்பியும் வந்து சேர்ந்துவிட்டான். இதுவரையில் வராத உறவுகள் வந்து சேர்ந்தவுடன் சிவசாமி விழிபிதுங்கி நின்றான்.

**மரபும் சூழ்நிலையும்**

மனிதன் வாழ்வதற்கு இரண்டு முக்கியமான காரணங்கள் உண்டு. ஒன்று மரபு. இன்னொன்று சூழ்நிலை. இவை இரண்டும் சரியாக இருந்தால் வாழ்க்கையில் வெளிச்சம். இல்லையென்றால் இருள் சூழும்.

தன்ராஜ் சிறுவனாக இருக்கும் போது திருவிழாக்காலங்களில் அவனது பெற்றோர் பொம்மைகளை வாங்கிக் கொடுத்தனர். அவனுக்கு வாத்து, நாய் போன்ற பொம்மைகளையெல்லாவற்றையும் விட லாரி, கார் போன்ற பொம்மையில் உள்ள டயர்களை மட்டுமே அதிகமாக விரும்பினான். படிப்பு சரியாக வராத காரணத்தினால் ஊர் சுற்றித் திரிந்தவன் நெடுஞ்சாலைகளில் நிற்கும் வாகனங்களில் இருந்து டயர்களை திருட்டுத்தனமாக கழற்ற ஆரம்பித்தான். அப்படி திருடுவதே அவனுக்கு வாழ்க்கையும் ஆகிவிட்டது. அவனுக்கு அவனைப் போல குணமுள்ள ஒரு பெண் மனைவியாக அமைந்துவிட்டாள். சிறுவயதிலிருந்தே திருடும் பழக்கம் உள்ளவள். கணவன் திருடிக் கொண்டு வரும் டயர்களை பாதிவிலைக்கு விற்பாள். இவர்களது பழக்கம் இவரது பிள்ளைக்கும் வந்துவிட்டது. அவன் பள்ளியில் மற்ற குழந்தைகளின் பொருட்களை எடுத்துவர ஆரம்பித்துவிட்டான்.

**ஒழுக்கமான வாழ்க்கை**

பெல்லாப் பாப்பாவுக்கு மூணு வயசு இருக்கும் போதே அப்பா இறந்து போயிடறாரு. அப்போ அந்த ஊரில் மளிகைக் கடை நடத்தும் கந்தசாமி நாடாரும், ஊர்க்காரர்களும் உதவியாய் இருந்து அப்பா காரியம் எல்லாம் முடிச்சாச்சு. அப்பா இறந்தது தெரியாமல் பெல்லாப் பாப்பா அப்பாவைக் கேட்டுக் கொண்டு இருந்தாள். அதுசமயம் நாடார் மளிகைக் கடையில் இருந்து ஆள் அனுப்பி இருந்தார். அம்மா நாடாரைப் பார்க்கப் போவதாக கூறிவிட்டு வெகுநேரம் கழித்துதான் வந்தாள்.

அம்மா வந்தவுடன் மகனின் பக்கத்தில் படுத்துக் கொண்டாள். அப்போது அவனுக்கு மூக்குப்பொடி நாற்றம் அடித்தது. அம்மா ஏதோ தவறு செய்துவிட்டு வந்துவிட்டாள் என்ற உணர்வு அவனுக்குத் தோன்றியது. அம்மாவின் இச்செயலை அக்காவும் உணர்கிறாள். தனது தாயின் நடத்தை சரியில்லை என்று சோற்றில் மருந்தை வைத்துக் கொன்று விடுகிறாள். அப்பாவுக்கு நாடார் காரியம் செய்தது போல அம்மாவுக்கும் முன்நின்று செய்தார்.

எப்பொழுதும் போல அக்காவும், தம்பியும் பெல்லாப் பாப்பாவைக் கூட்டிற்குக் கொண்டு வேலைக்குப் போகிறாள். சிறிது நாட்கள் கழித்து அம்மாவிடம் அடித்த அதே மூக்குப்பொடி வாசனை அக்காவிடம் அடிக்கிறது. பணம் இல்லாதவர்களுக்கு ஒழுக்கம் மட்டுமே வாழ்க்கை என்று எண்ணி தனது அக்காவையும் கொல்ல எண்ணி கறிசோற்றில் மருந்து வைத்துவிட்டு எப்பவும் போல கடைக்குச் சென்று விடுகிறான்.

கடைக்குச் சென்றவள் எப்போது இரவு சேதி வரும் என்கிற கொண்டோ தனது வேலையைச் செய்து கொண்டு இருந்தாள். சிறிது நேரத்தில் நாடாரிடம் இருந்து தொலைபேசி அழைப்பு வந்தது.
பெண்களின் மனநிலை

திருவிழாவிற்குப் போன மயிலாத்தாள் என்ற சிறுகதையில் புது மணப்பெண் எப்படியெல்லாம் கனவுகளுடனும், கற்பனைகளுடனும் வருவாள் என்றும் கூறியுள்ளார். மயிலாத்தாள் கணவனுக்கு என்னவெல்லாம் செய்ய வேண்டும், எப்படியெல்லாம் செய்ய வேண்டும் என்று திருமணமான ஒரே வாரத்தில் கற்றுக் கொண்டாள். சந்தைக்குச் சென்று காய்கறி எல்லாம் வாங்கப் பழகிப்போனாள்.

சென்னிமலைத்தேர் திருவிழாவிற்கு கணவனுடன் மகிழ்ச்சியுடன் மிதிவண்டியில் செல்கிறாள். மனதில் திருவிழாவிற்குச் செல்ல கணவன் மயங்கிவிழும் அளவிற்கு அழகாகத் தெரிந்தாள். திருவிழாவிற்குச் சென்றுவிட்டு ஆங்கிலப்படம் பார்க்க அவளை சினிமாத் தியேட்டருக்கு அழைத்துச் செல்கிறாள். ஆனால் அங்கு சென்றவன் மயிலாத்தாவை அடிக்கிறான்.

அடிவாங்கிய மயிலாத்தாள் அங்கேயே ஓரத்தில் உட்கார்ந்து அழுதுவிட்டு ஊருக்கு இரவில் தனிஆளாக நடந்து செல்கிறாள். தனக்கு முன்பாக குடிகாரக் கணவன் கட்டிலில் கிடக்கிறான். உடலில் ஏற்பட்ட வலியால் பாயைப் போட்டு அப்படியே படுத்து உறங்கிவிடுகிறாள்.

பொழுது விடிந்ததும், கணவனின் ஏச்சுப்பேச்சுக்கு ஆளாகிறாள். வீட்டிற்குள்ளே வந்து வாய்க்கு வந்த படி பேசி மயிலாத்தாளை அடிக்க வருகிறாள். அடியை வாங்காமல் கையைப் பிடித்து திருகி தள்ளிவிடுகிறாள். தள்ளிவிட்டவள் நான் எப்பவுமே அடிவாங்கிட்டு இருப்பேன்னு நெனச்சையா, இனி என்னைய அடுச்சே சோத்துல மருந்து வெச்சு கொன்று விடுவேன் என்கிறாள்.

'அவிங்கவிங்களுக்கு அவிங்கவிங்க தும்பம்' என்கிற சிறுகதையில் ரேரஸ்மேரி கிறிஸ்துவ சமயத்தைச் சேர்ந்த தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த பெண்ணாக இருந்தும் சுந்தரத்தை காதலித்து திருமணம் செய்து கொள்கிறாள். இவர்களுக்கு அழகான ஒரு குழந்தையும் பிறக்கிறது. குழந்தையை அறுத்து எடுத்ததால் ரோஸ்மேரி ஆறுமாதம் அம்மா வீட்டில் இருந்துவிட்டாள். இதற்குள்ளாக சுந்தரத்திற்கும் வேறொரு பெண்ணிற்கும் தொடர்பு ஏற்பட்டுவிட்டது.

ரோஸ்மேரிக்கு சுந்தரத்தின் மேல் கொலைவெறியாக இருந்தது. சுந்தரம் வேலை செய்து கொண்டிருந்த குடோனின் முதலாளி சுந்தரம் வாங்கின முன்பணம் ஆறாயிரம் ரூபாய்க்கு வீட்டில் உள்ள டி.வி.மற்ற சிலப் பொருட்களை எடுத்துச் செல்கிறான். ரோஸ்மேரியையும் தவறான கண்ணோட்டத்துடன் பார்க்கிறான். ஆனால் அவள் மசியவில்லை.

கணவன் செய்த தவறை தானும் செய்யாமல் வறுமையிலும் ஒழுக்கமாக வாழவேண்டும் என எண்ணுகிறான்.

'அம்மாவின் வால்' என்ற கதையில் திருநீலகண்டேஸ்வரிக்கு குடிகாரக் கணவன். அவன் மதிவண்டியை சரிசெய்யும் கடையை வைத்திருந்தான். எட்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருந்த தனது மகளை மிதிவண்டிக் கடையில் அமர்த்திவிட்டு சிறந்த ஆட்டுத்தரகராக மாறிவிட்டான். அப்படி இருக்கையில் பக்கத்து ஊரில் உள்ள ஒரு விதவைப் பெண்ணுடன் உறவு ஏற்பட்டுவிட்டது.

கண்ணப்பனின் தவறான பழக்கத்தினால் கணவன் மனைவி இருவரிடையே நாளுக்குநாள் புகைச்சல் அதிகமானது. தன் கணவனுடன் இனிமேல் சேர்ந்து வாழமுடியாது என்று எண்ணி தனியாகச் சென்றுவிடும் முடிவில் இருந்தாள். வீட்டிலே யாரிடமும் சொல்லாமல் மினியப்பனின் கோவில் சென்று அமர்ந்து கொண்டாள். தன் ஒழுக்கக்கெட்ட கணவனால் தன் மனதை இறுக்கமாக வைத்துக் கொண்டு யாருடனும் பேசாமல், உணவும் சரியாக உண்ணாமல் உயிர் இருக்கும் பிணம் போல இருக்கிறாள்.

**கதைகளில் வரும் கற்பனைகள்**

'பூரான்' எனும் கதையில் நல்லதம்பிக்கு நூற்றிமுப்பத்தி ஏழாவது தடவையாக பூரான் கடித்துவிட்டது. பூரான் கடித்தால் அம்மாவாசை நாளில் உடலில் தடிப்பு ஏற்பட்டுவிடும் என்கிற பயம் இருந்தது. முதன்முதலில் பூரான் நல்லதம்பி குழந்தையாக பாயில் படுத்திருந்த போது தொடையில் கடித்தது. அன்றிலிருந்து பூரான் இவனைக் கண்ட இடங்களிலெல்லாம் தன் வேலையைக் காட்ட ஆரம்பித்தது. நல்லதம்பியின் அம்மா சுந்தரவள்ளி பாம்புக்கடிக்குப் பழக்கப்பட்டவள். சுந்தரவள்ளியை வகைவகையான பாம்புகள் கடித்ததாகவும், ஆனால் அதனால் சுந்தரவள்ளிக்கு எதுவும் ஏற்படவில்லையென்றும், அப்பாம்புகள் எல்லாம் எலிகளைத் தின்று வாழ்பவை. ஆகையால் தனது எந்தத் தொந்தரவும் ஏற்படவில்லை என்று சொல்லியிருந்தார்.

நல்லதம்பி தான் பூரானாக மாறி மரப்பொந்திலோ, மரப்பட்டைகளிலோ ஒளிந்து கொண்டால் எப்படி இருக்கும் என எண்ணி கற்பனை செய்தான். தான் வேலை செய்யும் அலுவலகத்தில் விடுப்பு எடுத்துக் கொண்டு சொந்த ஊருக்குச் சென்றான். அங்கு தன் உடலில் ஏற்பட்டுள்ள மாற்றத்தைக் காண்பித்தான். பின் தான் இருப்பதற்கு குலதெய்வக் கோவிலின் ஆலமரந்தான் சரியானது என்று நினைத்து அங்கு சென்று தங்கிக் கொள்கிறான். ஊரார் எல்லாம் நல்லதம்பியை வேடிக்கையாகவும், ஆச்சர்யமாகவும் பார்த்துச் சென்றார்கள்.

'வேற்றுக்கிரகவாசி' என்ற சிறுகதையில் வரும் விசித்திரமானவனுக்கு முட்டைக்கோஸ் என்று பெயர். அப்பெயர்

தனக்குப் பொருத்தமானதாக எண்ணி மகிழ்ந்தான். முட்டைக்கோஸ் தான் செவ்வாய் கிரகத்தில் இருந்து வந்தவன் என்றும், வேற்றுக்கிரகவாசி என்றும் கூறிக்கொண்டு திரிந்தான்.

பனிக்காலத்தில் அவனது உடலில் ரோமங்கள் வளர்ந்துவிடும். இதனால் அவன் உடையணிவதையே தவிர்த்தான். கரடி போல ஊருக்குள் சுற்றித் திரிந்தான். காதுகள் இரண்டும் நீண்டு வளர்ந்து இருந்தது. பனிக்காலம் முடிந்தவுடன் ரோமங்கள் தானாக விழுந்துவிடும். காதுகளும் பழைய நிலைமைக்குத் திரும்பிவிடும்.

## சமுதாயத்தால் ஒதுக்கப்பட்டவர்கள்

நஞ்சன் என்பவன் தலித் இனத்தைச் சேர்ந்தவன். லோகாம்பாள் டீக்கடையில் காலை வேளையில் கொஞ்சம் பரபரப்பு அதிகமாக இருந்தது, நஞ்சப்பன் லோகாம்பாளை டீ குடுங்க சாமி என்று கேட்டான். ஆனால் அவள் காதில் எதுவும் விழாதவள் போல் இருந்தாள். லோகாம்பாள் டீக்கடையில் மாதாரிகள் குடிப்பதற்கு என்று தனியாக டம்ளர் இருக்கும். அதில்தான் அவர்கள் டீ குடிக்க வேண்டும். அவர்களே அதைக் கழுவியும் வைக்க வேண்டும். ஒரு டீக்காகக் காத்துக் கிடந்தவனுக்கு அந்த டீ பலமுறை கேட்டும் கிடைக்கவில்லையென்ற கோபத்தில் டம்ளரை கோபமாக வைத்துவிட்டுச் செல்கிறான்.

நஞ்சனுக்கு இரண்டு பிள்ளைகள் இருவரும் தறி ஓட்டுவதற்கு சென்றுவருகிறார்கள். பெரிய பையன் ரமேசு வேறு சாதியில் திருமணம் செய்து கொள்கிறான். அந்த சாதியைச் சார்ந்த பெரிய மனுசங்கயெல்லாம் நஞ்சனின் மகனைக் கொன்று விடுவதாக மிரட்டிவிட்டுச் செல்கிறார்கள். ரமேசு திருமணமான ஏழாம்நாளே அப்பெண்ணை விட்டுவிட்டு தன் வீட்டிற்குச் சென்றுவிடுகிறான். அந்தப் பெரிய சாதி பொண்ணு நமக்கு ஒத்துவராது என்று தனது தந்தை நஞ்சப்பனிடம் கூறுகிறான்.

## நிறைவுரை

வா.மு.கோமுவின் கதைகளில் நவீன விஞ்ஞானம் சாதியால் ஏற்படும் பிரச்சனைகள், காதல், கற்பனைகள், பாலியல் போன்ற பல பிரச்சனைகளை அழகாக எடுத்துக் கையாண்டுள்ளார். வாழக்கையில் ஏற்படும் சிக்கல்கள், அதனை சுமூகமாக பேசி தீர்ப்பது போன்ற பல செயல்களை தன் கதைகளில் வரும் கதாப்பாத்திரங்கள் மூலம் ஓடவிட்டிருக்கிறார்.




அன்ன மாவே மண்ணோடு கிளியே
இல்லி குடமா டெருமை நெய்யரி
அன்னர் தலையிடை கடைமா ணாக்கர்.

ISBN: 978-93-86770-84-4

அறம் பதிப்பகம்